பரமபதிதுணை.

# இலக்கணவினாவிடை.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது.

இது

க. வேலுப்பிள்ளையால்

தமது

யாழ்ப்பாணம்

விவேகாநந்தயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கலி: 5006. குரோதி௵ வைகாசி௴.

1904.

பரமசிவந்துணை.

# இலக்கணச் சுருக்கவினாவிடை.

முதலாவது

## எழுத்ததிகாரம்.

### ௧ எழுத்தியல்.

எழுத்துக்களின் பெயர்.

௧.—தமிழ்ப் பாஷையில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து என நான்கு வகைப்படும்.

௨.—உயிரெழுத்துக்கள் எவை?

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ இவ்வீராறும் உயிரெழுத்துக்களாம்.

௩.—உயிரெழுத்து எத்தனை வகைப்படும்?

குற்றெழுத்து, நெட்டெழுத்து என இரண்டு வகைப்படும்.

௪.—குற்றெழுத்துக்கள் எவை?

அ, இ, உ, எ, ஒ இவ்வைந்துங் குற்றெழுத்தாம்.

௫.—நெட்டெழுத்துக்கள் எவை?

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெட்டெழுத்தாம்.

௬.—மெய்யெழுத்துக்கள் எவை?

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டும் மெய்யெழுத்தாம்.

எ.—மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?

வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்றுவகைப்படும்.

அ.—வல்லெழுத்து எவை?

க், ச், ட், த், ப், ற் இவ்வாறும் வல்லெழுத்தாம்.

௯.—மெல்லெழுத்து எவை?

ங், ஞ், ண், ந், ம், ன் இவ்வாறும் மெல்லெழுத்தாம்.

௧௦.—இடையெழுத்து எவை?

ய், ர், ல், வ், ழ், ள் இவ்வாறும் இடையெழுத்தாம்.

௧௧.—இவ்வெழுத்துக்களுள் ஒன்றற்கொன்று இனமாவன உளவோ?

உயிர்களுள், அகரத்திற்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும், ஐகாரத்துக்கு இகாரமும், ஒகரத்துக்கு ஓகாரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனமாவனவாம்.

மெய்களுள், ககரத்துக்கு ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும் இனமாவனவாம்.

௧௨.—உயிர்மெய்யெழுத்து எவை?

உயிரும் மெய்யுங் கூடி வழங்குகிற கம் முதல் னௌ ஈறாக உள்ள இருநூற்றுப்பதினாறும் உயிர்மெய்யெழுத்தாம்.

௧௩.—ஆய்தவெழுத்து எது?

குற்றெழுத்துக்கும் உயிர்மெய்வல்லெழுத்துக்கும் நடுவே மூன்று புள்ளி வடிவையுடையதாய் வரும் ஓரெழுத்து ஆய்தவெழுத்தாம்.

உ-ம். எஃகு. அஃது.

௧௪.—ஆகத் தமிழ்நெடுங்கணக்கெழுத்துக்கள் எத்தனை?

| | |
|---|---|
| உயிரெழுத்து | ௧௨ |
| மெய்யெழுத்து | ௧௮ |
| உயிர்மெய்யெழுத்து | ௨௧௬ |
| ஆய்தம் | ௧ |
| ஆ | ௨௪௭. |

௧௫.—சுட்டெழுத்து எவை?

அ, இ, உ இம்மூன்றுஞ், சுட்டுப்பொருளில் வரும்போது, சுட்டெழுத்தாம்.

உ-ம். அவன், இவன், உவன்.
அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு.

௧௬.—வினாவெழுத்து எவை?

ஆ, எ, ஏ, ஓ என்னும், உயிரெழுத்து நான்கும், யா என்னும் உயிர்மெய்யெழுத்து ஒன்றும், வினாப்பொருளில் வரும்போது வினாவெழுத்தாம்.

உ-ம். அவனா, எவன், ஏது, இவனே, மரமோ, யாவை.

௧௭.—குற்றியலுகரமாவது யாது?

தனிக்குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்னே சொல்லிறுதியிலே வல்லினமெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரம் குற்றியலுகரமாம்.

அக்குற்றியலுகரம், ஈற்றெழுத்தாகிய தனக்கு அயலெழுத்தை நோக்கி, ஆறுவகைப்படும்.

உ-ம். நாகு.........நெடிற்றொடர்க்குற்றியலுகரம்.
எஃகு.......ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்.
வரகு.......உயிர்த்தொடர்க்குற்றியலுகரம்.
கச்சு.........வன்றொடர்க்குற்றியலுகரம்.
மஞ்சு......மென்றொடர்க்குற்றியலுகரம்.
சால்பு.....இடைத்தொடர்க்குற்றியலுகரம்.

௧௮.—முற்றியலுகரமாவது யாது?

மெல்லினமெய்யின்மேலும் இடையினமெய்யின்மேலும் ஏறிநிற்கும் உகரமும், தனிக்குற்றெழுத்துக்குப்பின் வல்லினமெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரமும் முற்றியலுகரமாம்.

உ-ம். விபு, தெரு, அது.

## எழுத்துக்களின் மாத்திரை.

௧௯.—ஒருமாத்திரையாவது யாது?

கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒருமாத்திரை.

௨௦.—எவ்வெவ்வெழுத்துக்கு எத்தனையெத்தனை மாத்திரை?

நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு; குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; மெய்யெழுத்

துக்கும் ஆய்தவெழுத்துக்கும் குற்றியலுகரத்துக்குந் தனித்தனி மாத்திரை அரை.

உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை ஒன்று; உயிர்மெய் நெட்டெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை இரண்டு.

---

## மொழிமுதலெழுத்துக்கள்.

௨௧.—மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள் எவை?

பன்னிரண்டுயிரெழுத்துக்களும், உயிரேறிய க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது மெய்யெழுத்துக்களும், மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களாம்.

உ-ம். அணி, ஆடை, இலை, ஈசல், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐயம், ஒளி, ஓடு, ஔவை.

கனி, சரி, தலை, நன்மை, பந்து, மணி, வயல், யமன், ஞமலி.

௨௨.—இவ்வொன்பது மெய்களுள், எந்தமெய்கள் பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலில் வரும்?

க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்களும், பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலில் வரும்.

௨௩.—ஒழிந்த வ, ய, ஞ என்னும் மூன்று மெய்களும் எந்தெந்த உயிரோடு மொழிக்கு முதல்வரும்?

வகரம் எட்டுயிரோடும், யகரம் ஆறுயிரோடும், ஞகரம் நான்குயிரோடும், மொழிக்கு முதல்வரும்.

உ-ம். வலி, வாழை, விளி, வீடு, வெளி, வேலை, வையம், வௌவால்.

யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

---

## மொழியிறுதியெழுத்துக்கள்.

௨௪.—மொழிக்கு இறுதியில்வரும் எழுத்துக்களெவை?

எகரமொழிந்த பதினொருயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொருமெய்களுமாகிய இருபத்திரண்டெழுத்துக்களும், மொழிக்கிறுதியில் நிற்கும் எழுத்துக்களாம்.

உ-ம். விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, கை, நொ, போ, வௌ, உரிஞ், மண், வெரிந், மரம், பொன், காய், வேர், வேல், தெவ், யாழ், வாள்.

---

## எழுத்துக்களின் சாரியை.

௨௫.—எழுத்துக்கள் எப்படி வழங்கும்?

மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், உயிர்நெட்டெழுத்துக்கள் காரச்சாரியையும், உயிர்க் குற்றெழுத்துக்களும் உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் கரம் காரம் என்னும் இரண்டு சாரியையும்பெற்று வழங்கும்.

உ-ம். க, ங. எ-ம். ஆகாரம், ஐகாரம். எ-ம். அகரம், அகாரம் எ-ம். ககரம், ககாரம். எ-ம். வரும்.

எழுத்தியல் முற்றிற்று.

# ௨. பதவியல்.

௨௬.—பதமாவது யாது?

ஓரெழுத்தாலாயினும், இரண்டுமுதலிய பலவெழுத்துக்களாலாயினும், ஆக்கப்பட்டுப், பொருளை அறிவிப்பதாம்.

௨௭.—அப்பதம் எத்தனைவகைப்படும்?

பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

௨௮.—பகாப்பதமாவது யாது?

பகுக்கப்படாத இயல்பையுடைய பதமாம்.

உ-ம். நிலம், நீர் ..பெயர்ப்பகாப்பதம்.
நட, வா...வினைப்பகாப்பதம்.
மற்று, ஏ ..இடைப்பகாப்பதம்.
உறு, நனி ..உரிப்பகாப்பதம்.

௨௯.—பகுபதமாவது யாது?

பகுக்கப்படும் இயல்பையுடைய பதமாம்.

உ-ம். பொன்னன் ..பெயர்ப்பகுபதம்.
நடந்தான் .. தெரிநிலைவினைப்பகுபதம்.
பெரியன்......குறிப்புவினைப்பகுபதம்.

— o —

பகுபதவுறுப்பு.

௩௦.—பகுபதம் எத்தனையுறுப்புக்களினால் முடிவுபெறும்?

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறுறுப்புக்களுள்ளும், பகுதி விகுதி என்னும் இரண்டு முதலியவைகளினால் முடிவுபெறும்.

உ-ம். கூனி=கூன் (பகுதி) + இ (விகுதி.)

உண்டான்=உண் (பகுதி) + ட் (இடைநிலை) + ஆன் (விகுதி.)

உண்டனன்=உண் (பகுதி) + ட் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி.)

பிடித்தனன்=பிடி (பகுதி) + த் (சந்தி) + த் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி.)

நடந்தனன்=நட (பகுதி) + த் (சந்தி) + த் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி) சந்தியால்வந்த தகரம் நகரமானது விகாரம்.

---

## பகுதி

௧௧.—பகுதியாவது யாது?

பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களாம்.

௧௨.—பெயர்ப் பகுபதங்களுக்கும் குறிப்புவினைப்பகுபதங்களுக்கும் பகுதிகள் யாவை?

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களுமாம்.

உ-ம். பொன்னன், நிலத்தன், தையான், வில்லன், கரியன், நடையன். பெயர்ப்பகுபதங்களுக்குங் குறிப்புவினை முற்றுப் பகுபதங்களுக்கும் உதாரணம் இவையே.

அவன், எவன், பிறன் என்பன பெயர்ப்பகுபதங்களுக்குச் சுட்டுமுதலிய இடைச்சொற்களும் பகுதிகளாய் வரும்.

௨௧.—தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பகுதிகள் யாவை?

நட, வா முதலிய வினைச்சொற்களாம்.

உ-ம். நட—நடந்தான்; வா—வந்தான்.

சித்திரம் சித்திரித்தான், போல் போன்றான், சால் சான்றான் எனத் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குச் சிறுபான்மை பொருட்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாய்வரும்.

௨௨.—நட, வா முதலிய தெரிநிலைவினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாயிடத்து எப்படி வரும்?

தன்வினைப்பகுதிகள் வி, பி, து, சு என்னும் விகுதிகள் பெற்றும், சிலபகுதிகள் நடுவிலுள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரியப்பெற்றும், சிலபகுதிகள் நடுவிலொற்றிரட்டப்பெற்றும், பிறவினைப்பகுதிகளாய் வரும்.

உ-ம். (க.) செய். செய்வி, செய்வித்தான்.
நட. நடப்பி, நடப்பித்தான்.
நட. நடத்து, நடத்தினான்.
பாய். பாய்ச்சு, பாய்ச்சினான்.
(உ) உறங்கு. உறக்கு, உறக்கினான்.
உருகு. உருக்கு, உருக்கினான்.

## விகுதி.

௨௩.—விகுதிகளாவன யாவை?

பகுபதங்களின் இறுதிநிலையில் நிற்கும் இடைப்பகாப்பதங்களாம்.

௨௪.—பெயர்விகுதிகள் எவை?

அன், ஆன், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், க, து, அ, வை என்னும் பதினைந்தும் பிறவுமாம்.

உ-ம். குழையன், வானத்தான், பிறன், குழையள், வானத்தாள், பொன்னி, பிறள், குழையர், வானத்தார், தேவிமார், கோக்கள், பிறர், அது, குழையன அவை.

௧௭.—தொழிற்பெயர் விகுதிகள் எவை?

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து என்னும் பதினேழும் பிறவுமாம்.

உ-ம். நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, நடவாமை, பாய்த்து.

௧௮.—பண்புப்பெயர் விகுதிகள் எவை?

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், கர் என்னும் பத்தும் பிறவுமாம்.

உ-ம். நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, பழுது, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

௧௯.—வினைமுற்று விகுதிகள் எவை?

(௧) அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, ஆ, என், அம், எம், ஓம், ஐ, ஆய், ஈர், உம், மின், ஏல், க என்னும் இருபத்தொன்றும் பிறவும் தெரிநிலைவினைமுற்று விகுதிகளாம்.

உ-ம். நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடந்தது, போயிற்று, நடந்தன, நடவா, நடந்தேன், நடப்பம், நடப்பேம், நடப்போம், நடந்தனை, நடந்தாய், நடந்தீர், நடவும், நடமின், நடவேல், நடக்க.

(உ) இவ்விருபத்தொரு விகுதிகளுள், ஆ, உம், மின், ஏல், க என்னும் ஐந்துமொழிந்த பதினாறுங் குறிப்புவினைமுற்றுக்களுக்கும் விகுதிகளாம்.

உ-ம். கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரிது, குழையிற்று, கரியன, கரியேன், கரியம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், கரியீர்.

௰. — பெயரெச்சவிகுதிகள் எவை?

(க) அ, உம் என்னும் இரண்டுந் தெரிநிலைவினைப் பெயரெச்சவிகுதிகளாம்.

உ-ம். செய்த, செய்கின்ற, செய்யும்.

(உ) குறிப்புவினைப்பெயரெச்சத்துக்கு, இவைகளுள், அ ஒன்றே விகுதியாம்.

உ-ம். கரிய.

௧௧. — வினையெச்சவிகுதிகள் எவை?

(க) உ, இ, ய், அ, கு, இன், ஆல், கால், மல், மே என்னும் பத்துந் தெரிநிலைவினையெச்ச விகுதிகளாம்;

உ-ம். நடந்து, ஓடி, போய், உண்ண, உணற்கு, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்ணாமல், உண்ணாமே.

(௨) குறிப்புவினையெச்சத்துக்கு, இவ்விகுதிகளுள், அ, ஆல், கால், மல், மை என்பனவைகளோடு து, றி என்பனவுமாம் விகுதிகளாம்.

உ-ம். மெல்ல, அல்லால், அல்லாக்கால், அல்லாமல், அல்லாமை, அல்லது, அன்றி.

கே.—இதுவரையுங் கூறிய விகுதிகளேயன்றிப் பிறவிகுதிகளும் உண்டா?

உண்டு, அவை வருமாறு:—

(௧) இ, ஐ, அம் என்னுமூன்றும் விகுதிகளும் வினைமுதற்பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப்பொருளையும் உணர்த்தும்.

உ-ம். (௧) உலவி, பறவை, எச்சம்.
(௨) ஊருணி, கொடை, தேட்டம்.
(௩) மண்வெட்டி, பார்வை, நோக்கம்.

(௨) விட், ஒழி விகுதிகள் துணிவுப்பொருளுணர்த்தும்.

உ-ம். வந்துவிட்டேன், கேட்டொழிந்தான்.

(௩) கொள் விகுதி தற்செயலுணர்த்தும்.

உ-ம். அடித்துக்கொண்டான்.

(௪) படு, உண், விகுதிகள் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும்.

உ-ம். கட்டப்பட்டான், கட்டுண்டான்.

(௫) மை விகுதி தன்மைப்பொருளுணர்த்தும்.

உ-ம். பெண்மை, ஆண்மை.

(௬) இடு, இரு என்பன, தாம் வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

உ-ம். எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

## இடைநிலை.

சக.—இடைநிலை எத்தனைவகைப்படும்?

பெயரிடைநிலை, வினையிடைநிலை என இரண்டுவகைப்படும்.

சஉ.—பெயரிடைநிலைகள் எவை?

பெயர்ப்பகுபதத்திலே பகுதி விகுதிகளை வேறுபிரித்துப் பார்க்கும்போது, அவ்விரண்டுக்கும் இடைநிற்பவையெல்லாம் பெயரிடைநிலைகளாம்.

உ-ம். அறிஞன்...........[ஞ இடைநிலை]
ஓதுவான்.........[வ இடைநிலை]
வலைச்சி...........[ச இடைநிலை]
வண்ணாத்தி.........[த இடைநிலை]

சங.—வினையிடைநிலைகள் எத்தனைவகைப்படும்?

இறந்தகாலவிடைநிலை, நிகழ்காலவிடைநிலை, எதிர்காலவிடைநிலை என மூன்றுவகைப்படும்.

சச.—இறந்தகாலவிடைநிலைகள் எவை?

த், ட், ற், இன் என்னு நான்குமாம்.

உ-ம். செய்தான், உண்டான், தின்றான், ஓடினான்.

சரு.—நிகழ்காலவிடைநிலைகள் எவை?

ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றுமாம்.

உ-ம். நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

சசு.—எதிர்காலவிடைநிலைகள் எவை?

ப், வ் என்னும் இரண்டுமாம்.

உ-ம். நடப்பான், செய்வான்.

௯௯.—எதிர்மறையிடைநிலைகள் எவை?

இல், அல், ஆ என்னும் மூன்றுமாம். இவற்றுள், ஆகார விடைநிலை, வருமெழுத்து மெய்யாயிற் கெடாதும், உயிராயிற் கெட்டும், வரும்.

உ-ம். (௧) நடந்திலன், நடக்கின்றிலன்.
(௨) உண்ணலன்.
(௩) உண்ணாதான், உண்ணான். [உண்ணாதான் என்பதிலே தகரமெய் எழுத்துப்பேறு]

---

## விகுதி காலங்காட்டல்.

௱.—மேற்சொல்லிய வினையிடைநிலைகளே யலாது விகுதியினாலே காலங்காட்டும் வினைகளும் உண்டோ?

சில உண்டு; அவை, முன்னிலையேவல் வினைமுற்றுக்களும், வியங்கோள்வினை முற்றும், செய்யுமென்வினைமுற்றும், செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சமும், இகர யகாவீற்றுச் செய்தென் வாய்பாட்டு வினையெச்சமும், செய், செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுமாம்.

---

## சாரியை.

௱௧—சாரியைகளாவன யாவை?

அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஆம், அ, ஆ, உ, எ, ஐ, கு, ஞ், ன் என்னும் பதினாறும் பிறவுமாம்.

உ-ம். நடந்தனன், பசுவினெய், உளையல், பலவற்றை, பதிற்றுப்பத்து, அசுத்தன், புளியங்காய், மண்ணுங்கட்டி, நடந்தது, இல்லாப்பொருள், உண்ணுவான், ஒன்றேகால், இரட்டைப்பிள்ளை, உண்குவான், செய்துகொண்டான், ஆன்.

---

## சந்தி.

௩௨.—சந்திகளாவன யாவை?

இனிப் புணரியலிற் சொல்லப்படுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரம் மூன்றுமாம்.

---

## விகாரம்.

௩௩.—விகாரங்களாவன யாவை?

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை, என்னுஞ் செய்யுள் விகாரம் ஒன்பதுமாம்.

பதவியல் முற்றிற்று.

---

# ந. புணரியல்.

ருச.—புணர்ச்சியாவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

ருரு.—அப்புணர்ச்சி எத்தனைவகைப்படும்?

வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என இரண்டுவகைப்படும்.

ருசா.—வேற்றுமைப்புணர்ச்சியாவது யாது?

ஐ, ஆல், கு, இன், அது, கண், என்னும் ஆறுருபுகளும இடையில் மறைந்தாயினும வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.

| வேற்றுமைத்தொகை. | | வேற்றுமைவிரி. |
|---|---|---|
| நீர்குடித்தான் | [ஐ] | நீரைக்குடித்தான். |
| கல்லெறிந்தான் | [ஆல்] | கல்லாலெறிந்தான். |
| கொற்றன்மகன் | [கு] | கொற்றனுக்குமகன். |
| மலைவீழருவி... | [இன்] | மலையின்வீழருவி. |
| சாத்தன்கை ... | [அது] | சாத்தனதுகை. |
| மலைநெல் ...... | [கண்] | மலையின்கணெல். |

ருஎ.—அல்வழிப்புணர்ச்சியாவதுயாது?

வேற்றுமையல்லாத வழியிற் புணர்வதாம். அது, பதினான்குவகைப்படும்.

உ-ம்.

(க.) கொல்யானை ... ... வினைத்தொகை.

(உ.) கருங்குதிரை... ... பண்புத்தொகை.

சாரைப்பாம்பு ...... இருபெயரொட்டுப்பண்புத்
[தொகை.

(கூ.) மதிமுகம் ... ... ... உவமைத்தொகை.
(௪.) இராப்பகல் ... ... உம்மைத்தொகை.
(௫.) பொற்றொடி ...... அன்மொழித்தொகை.
(௬.) சாத்தன் வந்தான்... எழுவாய்த்தொடர்.
(௭.) சாத்தாவா ......... விளித்தொடர்.
(௮.) வந்தான் சாத்தன் தெரிநிலைவினைமுற்றுத்தொடர்.
(௯.) பொன்னனிவன் ... குறிப்புவினைமுற்றுத்தொடர்.
(௧0.) வந்த சாத்தன் ... ... பெயரெச்சத்தொடர்.
(௧௧) வந்து போனான் ... வினையெச்சத்தொடர்.
(௧௨) மற்றொன்று ... ... இடைச்சொற்றொடர்.
(௧௩.) நனிபேதை ........ உரிச்சொற்றொடர்.
(௧௪.) பாம்பு பாம்பு ... ... அடுக்குத்தொடர்.

௫௮.—மொழிகள் எப்படிப்புணரும்?

இயல்பாகவேனும் விகாரமாகவேனும் புணரும்.

௫௯.—இயல்பு புணர்ச்சியாவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம்.

உ-ம். பொன்மலை, ஒளிமணி.

௬0.—விகாரப்புணர்ச்சி யாவது யாது?

நிலைமொழியேனும், வருமொழியேனும்,இவ்விருமொழியுமேனும், தோன்றல், திரிதல், கெடுதல், என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றையாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வதாம்.

உ-ம். வாழைப்பழம் ... தோன்றல்.
மட்குடம் ... ... திரிதல்.
மரவேர் ... ... கெடுதல்.
நிலப்பனை ...... கெடுதல், தோன்றல்.
பனங்காய் ...... கெடுதல், தோன்றல் தி[ரிதல்.

## மெய்க்குமுன் உயிர் புணர்தல்.

௩௧.—மெய்யீற்றின்முன் உயிர்வந்தால் எப்படிப்புணரும்?

(௧.) மெய்யீற்றின் முன் உயிர் வந்தால், வந்த உயிர் அந்த மெய்யின்மேல் ஏறும்.

உ-ம். ஆண், அழகு—ஆணழகு.

(௨.) தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும்.

உ-ம். கல், எறிந்தான்—கல்லெறிந்தான்.

## உயிர் முன் உயிர் புணர்தல்.

௩௨.—உயிரீற்றின்முன் உயிர் வந்தால் எப்படிப்புணரும்?

(௧.) இ, ஈ, ஐ, என்னும் மூன்றுயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால், இடையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம். மணி, அழகு—மணியழகு.
தீ, எரியும்—தீயெரியும்.
பனை, ஓலை —பனையோலை.

(௨.) ஏகாரவுயிரீற்றின் முன் உயிர் வந்தால், இடையில் யகரமாயினும் வகரமாயினும் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம். அவனே, அழகன் — அவனேயழகன்.
சே, எறி — சேவேறி.

(ங.) அ, ஆ, உ, ஊ, ஓ, ஒ, ஔ, என்னும் ஏழுயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால், இடையில் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம். பல, அணி —பலவணி.
பலா, இலை —பலாவிலை.
திரு, அடி —திருவடி.
பூ. அரும்பு —பூவரும்பு.
கொ, அழகர் —கொவ்வழகர
கோ, அழகு —கோவழகு.
கௌ, அழகு —கௌவழகு.

---

## சுட்டு முன்னும் வினா முன்னும் நாற்கணமும் புணர்தல்.

சங.—மூன்று சுட்டுமுன்னும் எகரவினாமுன்னும் நாற்கணமும் வந்தால் எப்படிப் புணரும்?

யகரமொழிந்த மெய்கள் வந்தால், வந்த வெழுத்து மிகும்; யகரமும் உயிரும் வந்தால், இடையில் வகரந் தோன்றும்.

உ-ம். அக்காலம் எக்காலம்.
அம்மலை எம்மலை.
அவ்வழி எவ்வழி.
அவ்யானை எவ்யானை.
அவ்வுயிர் எவ்வுயிர்.

---

## குற்றுகர முன்னுஞ் சில முற்றுகர முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்.

௬௪.—குற்றியலுகரவீற்றின் முன்னுஞ் சில முற்றியலுகரவீற்றின்முன்னும் உயிரும் யகரமும் வந்தால் எப்படிப்புணரும்?

குற்றியலுகரம் உயிர் வந்தாற் றானேறி நின்ற மெய்யை விட்டுக் கெடும்; யகரம் வந்தால், இகரமாகத் திரியும். சில முற்றியலுகரம் இவ்விருவிதியும் பெறும்.

உ-ம். ஆடு, அரிது — ஆடரிது.
ஆடு, யாது — ஆடியாது.
கதவு, அரிது — கதவரிது.
கதவு, யாது — கதவியாது.

---

## உயிர் முன்னும் யரழ மெய் முன்னும் வல்லினம் புணர்தல்.

௬௫.—உயிரீற்றின் முன்னும் ய ர ழ மெய்யீற்றின் முன்னும் வல்லினம் வந்தால், எப்படிப் புணரும்?

உயிரீற்றின் முன்னும் ய ர ழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

உ-ம். பலா, காய் — பலாக்காய்.
இந்த, சத்தம்—, இந்தச்சத்தம்.
வாங்கி, தருவேன்—வாங்கித்தருவேன்.
சாரை, பாம்பு—சாரைப்பாம்பு
பொய், செல்வம்—பொய்ச்செல்வம்.
தேர், கால்—தேர்க்கால்.
தமிழ், கல்வி—தமிழ்க்கல்வி.

௬௬.—உயிரீற்றின் முன்னும் ய ர ழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் எவ்வெவ்விடங்களில் இயல்பாம்?

(க.) உயிரீற்று வினைப்பெயருக்கும், அகரவீற்றுப்பெயரெச்சத்துக்கும், அகரவீற்றஃறிணைப்பன்மைப்பெயருக்கும், நீ என்னும் பொதுப்பெயருக்கும், அது இது உது என்னுஞ் சுட்டுப்பெயர்களுக்கும், எது என்னும் வினைப்பெயருக்கும், ஒரு இரு அறு எழு என்னும் விகாரவெண்ணுப்பெயர்களுக்கும், மூன்றும் ஆறும் வேற்றுமையுருபுகளுக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம்.

| | |
|---|---|
| அவனே கொடுத்தான்<br>நானே தந்தேன் | வினைப்பெயர். |
| உண்டகுதிரை<br>கரியசாத்தன் | பெயரெச்சம். |
| பல குதிரை<br>சில தந்தான் | அஃறிணைப்பன்மைப்பெயர். |
| நீ கண்டாய்<br>நீ போனாய் | பொதுப்பெயர். |
| அது குறிது<br>இது தந்தான் | சுட்டுப்பெயர். |
| எது பெரிது<br>எது பெற்றான் | வினைப்பெயர். |
| ஒருகை<br>இருசெவி<br>அறுகுணம்<br>எழுபுவி | விகார வெண்ணுப்பெயர். |

சாத்தனொடு சென்றான் மூன்றனுருபு.
எனது தலை ஆறனுருபு.

(உ.) உயிரையும் ய ர ழ மெய்யையும் இறுதியாக உடைய விளிப்பெயருக்கும், உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களுக்கும், வினைமுற்றுக்கும், வினைத்தொகைக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். சாத்தா சேள்
தம்பீ தா
நங்காய் பார்
பெரியீர் போமின்
} விளிப்பெயர்.

நம்பி குறியன்
நம்பி கை
விடலை சிறியன்
சேய் பெரியன்
அவர் தலை
} உயர்திணைப்பெயர்.

சாத்தி குறியள்
சாத்தி குறிது
சாத்தி கால்
தாய் கொடியள்
தாய் கொடிது
தாய் கை
} பொதுப்பெயர்.

உண்டன குதிரைகள்
உண்ணு குதிரைகள்
வந்தனை சாத்தா
வந்தாய் பூதா
உண்டார் புலவர்
வாழ் பூதா
} வினைமுற்று.

விரிசுடர்
அடுகளிறு
வினைசலம்
செய்கடன்
குளிர்காற்று
வீழ்புனல்
} வினைத்தொகை.

ழகரமெய் உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களுக்கு ஈருகாது. ரகரமெய் பொதுப்பெயருக்கு ஈருகாது.

(ங.) இகர ஐகாரங்களையும் ய ர ழ மெய்களையும் இறுதியாக உடைய அஃறிணைப்பெயர்களுக்கு முன் வரும் வல்லினம் எழுவாய்த்தொடரிலும் உம்மைத்தொகையிலும் இயல்பாம்.

உ-ம். பருத்திகுறிது, யானைபெரிது, நாய் தீது, வேர் சிறிது, யாழ் பெரிது — எழுவாய்.

பரணி கார்த்திகை, யானை குதிரை, பேய் பூதம், நீர் கனல், இகழ் புகழ் — உம்மைத் தொகை.

(ச.) என்ன என்னும் வினாவுக்கும், வினையயடுத்த படியென்னுஞ் சொல்லுக்கும், தனையென்னுஞ் சொலலுக்கும முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். என்னசெய்தி, வரும்படிசொன்னான், எத்தனைபணம்.

---

குற்றியலுகர வீறு.

௬எ.—அறுவகைக் குற்றியலுகரங்களுள்ளும் எவ்வெவைகளின் முன் வரும் வல்லினம் எவ்வெவ்விடங்களில் இயல்பாம்?

(க.) வன்றொடர்க்குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் முன்னிலையேவல்வினை மு

ற்றுத்தொடரிலும், வினைத்தொகையிலும் இயல்பாம்.

உ-ம். ஈட்டுகொற்றா நாட்டுபுகழ்.

(உ.) மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்.

உ-ம். குரங்கு கடிது, நடந்துசென்றான்.

(௩.) நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர், என்னும் இந்நான்குதொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும் வரும் வல்லினம் இருவழியினும் இயல்பாம்.

| உ-ம். அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| நாகு கடிது | நாகு கால். |
| எஃகு கொடிது | எஃகு கூர்மை. |
| வரகு சிறிது | வரகுசோறு. |
| தெள்கு பெரிது | தெள்கு பெருமை. |

சூத்.—டகர றகரவீற்று நெடிற்றொடர்க்குற்றியலுகர மொழிகளிலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகர மொழிகளிலும், ஈற்றுகரமேறிய டகர றகர மெய்கள் நாற்கணமும் வரப் பெரும்பாலும் எவ்வழியில் இரட்டித்துவரும்.

அவ்விரண்டு மெய்களும் பெரும்பாலும் வேற்றுமையிலும், அல்வழியிற் பண்புத்தொகையிலும் இரட்டித்து வரும்.

| உ-ம். வேற்றுமை | பண்புத்தொகை. |
|---|---|
| மாட்டு[illegible] | வரட்டாடு. |
| ஆற்றுப்பெருக்கு | வெளிற்றுப்பனை. |

எருத்தியாடு எனச் சிறுபான்மை பிறவொற்றிரட்டுதலு முண்டு.

௬௯.—மென்றொடர்க்குற்றுகர மொழிகளுள்ளே சில நாற்கணமும் வந்து புணர வன்றொடராய்த் திரிதலுமுண்டோ?

வேற்றுமையிலும், அல்வழியிலே பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும், சில மென்றொடர்க்குற்றியலுகரமொழிகள் வன்றொடராய்த் திரிந்து வருதலும் உண்டு.

உ-ம்.

இரும்பு, சட்டி —இருப்புச்சட்டி } வேற்றுமை.
கன்று, ஆ —கற்றா }
என்பு, உடம்பு—எற்புடம்பு [பண்புத்தொகை
இரும்பு, நெஞ்சம்-இருப்புநெஞ்சம்,உவமைத்தொகை

௭0.—சில மென்றொடர்க் குற்றியலுகரமொழிகள் ஈற்றில் ஐகாரச்சாரியை பெற்றுவருதலும் உண்டோ?

சில மென்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும் உண்டு.

உ-ம்.

இன்று, நாள்—இற்றைநாள்[பண்புத்தொகை]
அன்று, கூலி—அற்றைக்கூலி[வேற்றுமை
நேற்றைத்தினம் நேற்றைக்கூலி என வன்றொடர் ஐகாரச்சாரியை பெறுதலும் உண்டு.

## மெல்லினமிகுதல்.

௭௧.—வல்லினமன்றி மெல்லினம் எவ்விடத்தும் மிகுதலில்லையா?

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த யகரத்தின் முன்னும், தனி ஐகாரத்தின் முன்னும் வரும் மெல்லினம் மிகும்.

உ-ம், மெய், ஞானம்—மெய்ஞ்ஞானம்
செய், நன்றி —செய்ந்நன்றி
கை, மாறு —கைம்மாறு.

---

## ணகர னகர விறு.

௪உ.—ணகரத்தின் முன்னும் னகரத்தின் முன்னும் வல்லினம் வந்தால், எப்படிப்புணரும்?

வேற்றுமையில் ணகரம் டகரமாகவும் னகாம் றகரமாகவுந் திரியும்; அல்வழியில் இயல்பாம்.

உ-ம், வேற்றுமை.

மண், குடம்—மட்குடம்.
பொன், குடம்—பொற்குடம்.

அல்வழி.

மண், பெரிது—மண்பெரிது.
பொன், சிறிது —பொன்சிறிது.

௪௩.—ணகர னகரங்கள் எவ்விடத்துங் கெடுதலில்லையா?

தனிக்குற்றெழுத்தைச் சாராத ணகர னகரங்கள் வருமொழிமுதலில் உள்ள நகரந் திரிந்தபின் கெடும்.

உ-ம், வேற்றுமை.

தூண், நன்மை.—தூணன்மை,
பசும்பொன், நன்மை—பசும்பொனன்மை.

அல்வழி.

தூண், நன்று—தூணன்று.
பசும்பொன், நன்று—பசும்பொனன்று.

## லகர ளகர வீறு.

எச.—லகர ளகரங்களின் முன் வல்லினம் வந்தால் எப்படிப்புணரும்?

வேற்றுமையில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவுந் திரியும்; அல்வழியில் இயல்பாம்.

உ-ம். வேற்றுமை.

கல், சட்டி — கற்சட்டி.
புள், சிறை — புட்சிறை.

அல்வழி.

வேல், கொடிது — வேல்கொடிது.
வாள், சிறிது — வாள்சிறிது.

எரு.—லகர ளகரங்களின் முன் மெல்லினம் வந்தால் எப்படிப்புணரும்?

இருவழியிலும் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

உ-ம். வேற்றுமை.

கல், நீட்சி — கன்னீட்சி.
எள், நெய் — எண்ணெய்.

அல்வழி.

கல், மறைந்தது — கன்மறைந்தது.
எள், நிறைந்தது. — எண்ணிறைந்தது.

எசு.—லகர ளகரங்கள் எவ்விடத்துங் கெடுதலில்லையா?

தனிக்குறிலெழுத்தைச் சாராத லகர ளகரங்கள், அல்வழியில் வந்த தகரந் திரிந்தபின்னும், இருவழியிலும் வந்த நகரந்திரிந்தபின்னுங் கெடும்.

உ-ம். அல்வழி.

தோன்றல், தீயன்—தோன்றறீயன்.
வேள், தீயன்—வேடீயன்.

வேற்றுமை.

தோன்றல், நன்மை—தோன்றனன்மை.
வேள், நன்மை—வேணன்மை.

அல்வழி.

தோன்றல், நல்லன்—தோன்றனல்லன்
வேள், நல்லன்—வேணல்லன்.

---

தகர நகரந் திரிதல்.

எஎ.—னகரலகரங்களின் முன் வருந் தகர நகரங்கள் எவ்வாறாம்?

தகரம் றகரமாகவும், நகரம் னகரமாகவுந் திரியும்.

உ-ம். பொன், தீது—பொன்றீது.
கல், தீது—கற்றீது.
பொன், நன்மை—பொன்னன்மை.
கல், நன்மை—கன்னன்மை.

எஅ.—ணகரளகரங்களின் முன் வருந் தகர நகரங்கள் எவ்வாறாம்?

தகரம் டகரமாகவும், நகரம் ணகரமாகவுந் திரியும்.

உ-ம். மண், தீது—மண்டீது.
முள், தீது—முட்டீது.
கவண், நெடிது—கவணெடிது.
அருள், நலம்—அருணலம்.

பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்க
ளீற்று ண ன ல ள.

எகூ—பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களின் ஈற்று ணகர னகர லகர ளகரங்களும், வல்லினம் வந்தால், வேற்றுமையிலே திரிந்தேவருமா?

திரியாது இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | பொதுப்பெயர், | உயர்திணைப்பெயர். |
| | ஆண்கை, | அவன்குணம். |
| | சாத்தன்செவி, | தோன்றல் செவி. |
| | அங்கல்கை, | அவள் கை. |

---

மகர வீறு.

அ0.—மகரத்தின் முன் நாற்கணமும் வந்தால் எப்படிப்புணரும்?

(க.) வல்லினம் வந்தால், அல்வழியில் வருமெழுத்துக்கு இனவெழுத்தாகத் திரியும்; வேற்றுமையில் மகரங் கெட வரும் வல்லினமிகும்.

அல்வழி.

மரம், குறிது — மரங்குறிது.

வேற்றுமை.

மரம், கொம்பு — மரக்கொம்பு.

(உ.) மெல்லினம் வந்தால் இருவழியினுங்கெடும்.

உ-ம். மரம், நீண்டது—மரநீண்டது.
மரம், நார்—மரநார்.

(௩.) மகரம், உயிரும் இடையினமும் வந்தால், வேற்றுமையிலே கெடும்; அல்வழியிலே பெரும்பாலுங் கெடாது நிற்கும்.

உ-ம். வேற்றுமை.

மரம், அடி—மரவடி.
மரம், வேர்—மரவேர்.

அல்வழி.

மரம், அரிது—மரமரிது.
மரம், வலிது—மரம்வலிது.

௪௧.—தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மகரமெய் நாற்கணமும் வந்தால், இருவழியிலும் எவ்வாறும்?

கெடாது நிற்கும்; க ச த வந்தால் இனமெல்லெழுத்தாகவும், ஞ ந வந்தால் அவ்வந்தவெழுத்தாகவுந் திரியும்.

உ-ம். உம், அருள்—உம்மருள்.
உம், பெருமை—உம்பெருமை.
நம், வளம்—நம்வளம்.
நம், குணம்—நங்குணம்.
எம், நூல்—எந்நூல்.

## வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை.

௮௨.—வேற்றுமைப் புணர்ச்சிகளுள் மேற்கூறிய விதி பெறாது வேறுபட்டு வருவனவும் உளவோ?

வேற்றுமைப்புணர்ச்சியில் விகாரமாகவேண்டியவை, இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வருமொழி வினைச்சொல்லாயவிடத்து இயல்பாகவரும்.

உ-ம். புளி தின்றான், பனை தறித்தான், பொய் சொன்னான், தமிழ் படித்தான், மண் கொணர்ந்தான், பொன் கொடுத்தான், நூல் கற்றான், அருள் பெற்றான்.

புணரியல் முற்றிற்று.

---

எழுத்ததிகார முற்றுப்பெற்றது.

## இரண்டாவது.

# சொல்லதிகாரம்.

---

## ௧. பெயரியல்.

---

௮௩.—சொல்லாவது யாது?

எழுத்துக்களால் ஆக்கப்பட்டு இருதிணையாகிய ஐம்பாற்பொருளையும் மூவிடத்தைப் பற்றி நின்று விளக்குவதாம்.

---

### இருதிணை.

௮௪.—இருதிணையென்பவை யாவை?

உயர்திணையும் அஃறிணையுமாம்.

௮௫.—உயர்திணையென்பவை யாவை?

மனிதர், தேவர், நாகர் என்னும் மூவகைச் சாதிப் பொருளுமாம்.

௮௬.—அஃறிணையென்பவை யாவை?

மிருகம், பறவை முதலிய உயிருள்ள சாதிப் பொருள்களும், நிலம் நீர் முதலிய உயிரில்லாதசாதிப் பொருள்களுமாம்.

---

### ஐம்பால்.

௮௭.—ஐம்பாலென்பவை யாவை?

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவைகளாம்.

உயர்திணைக்கு ஆண்பால், பெண்பால், பலர்பால் இம்மூன்றும் உரியன. அஃறிணைக்கு ஒன்றன்பால், பலவின்பால் இவ்விரண்டும் உரியன.

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை எனப்படும். பலர்பால், பலவின்பால் இவ்விரண்டும் பன்மை எனப்படும்.

உ-ம். அவன், வந்தான்...உயர்திணையாண்பால்.
அவள், வந்தாள்...உயர்திணைப்பெண்பால்.
அவர், வந்தார்...உயர்திணைப்பலர்பால்.
அது, வந்தது...அஃறிணையொன்றன்பால்.
அவை, வந்தன...அஃறிணைப்பலவின்பால்.

---

## மூவிடம்.

அ௯—மூவிடமென்பவை யாவை?

தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவைகளாம்.

உ-ம். நான், வந்தேன்...தன்மை.
நீ, வந்தாய்...முன்னிலை.
அவன், வந்தான்...படர்க்கை.

## சொற்களின் வகை.

அக.—சொற்கள் எத்தனைவகைப்படும்?

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

## பெயர்ச்சொல்வகை.

௬௦.—பெயர்ச்சொல்லாவது யாது?

ஒருபொருளினது பெயராய் வழங்குஞ் சொல்லாம்.

உ-ம். மனிதன், வீடு, நன்மை.

௬௧.—பெயர்ச்சொல் எத்தனைவகைப்படும்?

இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இரண்டுவகைப்படும்.

௬௨.—இடுகுறிப்பெயராவது யாது?

ஒரு காரணமும் பற்றாது பொருளை அறிவித்து நிற்கும் பெயராம்.

உ-ம். மரம், மலை, கடல், சோறு.

௬௩.—காரணப்பெயராவது யாது?

யாதேனும் ஒருகாரணம் பற்றிப் பொருளை அறிவித்து நிற்கும்பெயராம்.

உ-ம். பறவை, அணி, பொன்னன், கணக்கன்.

---

## தன்மைப்பெயர்.

௬௪.—தன்மைப்பெயர்கள் எவை?

நான், யான், என்பவை தன்மையொருமைப்பெயர்கள். நாம், யாம், நாங்கள், யாங்கள் என்பவை தன்மைப்பன்மைப்பெயர்கள்.

---

## முன்னிலைப்பெயர்கள்.

௬௫.—முன்னிலைப்பெயர்கள் எவை?

நீ என்பது முன்னிலையொருமைப்பெயர், நீர், நீங்கள் என்பவை முன்னிலைப்பன்மைப்பெயர்கள்.

---

## படர்க்கைப் பெயர்.

௩௬.—படர்க்கைப்பெயர்கள் எவை?

மேற்சொல்லப்பட்ட தன்மை முன்னிலைப் பெயர்களல்லாத மற்ற எல்லாப்பெயர்களுமாம்.

உ-ம்.

அவன்—உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்.

அவள்—உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்.

அவர்—உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

அது—அஃறிணையொன்றன்பாற் படர்க்கைப்பெயர்.

அவை—அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்.

---

## ஆகுபெயர்.

௩௭.—ஆகுபெயராவது யாது?

ஒருபொருளின் இயற்பெயரால் அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொருபொருளைத் தொன்று தொட்டு வழங்குவது ஆகுபெயராம். அவ்வாகுபெயர் பதின்மூன்றுவகைப்படும். அவையாவன:-

(க.) பொருளாகுபெயர். உ-ம். தாமரைபோலு முகம்.
(உ.) இடவாகுபெயர். உ-ம். ஊரடங்கிற்று.
(ங.) காலவாகுபெயர். உ-ம். காரறுத்தது.
(ச) சினையாகுபெயர். உ-ம். வெற்றிலை நட்டான்.
(ரு.) குணவாகுபெயர். உ-ம். வெள்ளைவந்தது.
(சு.) தொழிலாகுபெயர். உ-ம். வற்றலுண்டான்.
(எ.) அளவையாகுபெயர். உ-ம். காலாலே நடந்தான்.
(அ.) சொல்லாகுபெயர். உ-ம். இதற்குரை சொல்லு.
(கூ.) தானியாகுபெயர். உ-ம். விளக்கு முறிந்தது.
(க0) கருவியாகுபெயர். உ-ம். திருவாசகம்.
(கக.) காரியவாகுபெயர். உ-ம். இந்நூலலங்காரம்.
(கஉ) கருத்தவாகுபெயர். உ-ம். திருவள்ளுவர் படித்தான்.
(கங.) உவமையாகுபெயர். உ-ம். பாவைவந்தாள்.

## வேற்றுமை.

௬அ.—வேற்றுமையாவது யாது?

தன்னை யேற்ற பெயரினது பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம்.

௬௯.—அவ்வேற்றுமை எத்தனைவகைப்படும்?

முதல்வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாமவேற்றுமை, நான்காம்வேற்றுமை, ஐந்தாம்வேற்றுமை, ஆறும்வேற்றுமை, எழாம்வேற்றுமை, எட்டாம்வேற்றுமை எனஎட்டுவகைப்படும்.

இவைகளுள், முதல்வேற்றுமை, எழுவாய் எனவும், பெயர்வேற்றுமை எனவும் பெயர்பெறும்.

கoo.—எழுவாய் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

எழுவாய் வேற்றுமைக்கு உருபு திரிபில்லாத பெயராம், பொருள் வினைமுதலாம்.

உ-ம். சாத்தன் வந்தான்.

கoக.—இரண்டாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

இரண்டாம்வேற்றுமைக்கு உருபு ஐ என்பதாம்; பொருள் செயப்படுபொருளாம.

உ-ம். குடத்தை வனைந்தான்.

கoஉ.—மூன்றாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

மூன்றாம் வேற்றுமைக்கு உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பவைகளாம. ஆல், ஆன், என்னும் உருபுகளுக்குப் பொருள் கருவியுங் கருத்தாவுமாம. ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பொருள் உடனிகழ்ச்சிப் பொருளாம.

உ-ம். வாளால் வெட்டினான்.
சாத்தனால் வெட்டப்பட்டது.
மகனோடு தந்தைவந்தான்.

ஆலுருபு நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும்; ஒடுருபு நிற்றற்குரியவிடத்து உடனென்பதுஞ் சொல்லுருபாக வரும்.

உ-ம். வாள்கொண்டு வெட்டினான்.
தந்தையுடன் மைந்தன் வந்தான்.

கoங.—நான்காம்வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

நான்காம்வேற்றுமைக்கு உருபு குவ்வென்பதாம்; பொருள் கோடற் பொருளாம்.

உ-ம். சாத்தற்குக் கொடுத்தான்.

௧0௪.—ஐந்தாம் வேற்றுமைக்குஉருபும் பொருளும்எவை?

ஐந்தாம்வேற்றுமைக்கு உருபு இன், இல் என்பவைகளாம்; பொருள் நீக்கப்பொருளும், எல்லைப்பொருளும், ஏதுப்பொருளுமாம்.

உ-ம். ஊரினீங்கினன்.
சீர்காழியின் வடக்குச் சிதம்பரம்.
கல்வியிற் பெரியவன் கம்பன்.

௧0௫.—ஆறும்வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

ஆறும்வேற்றுமைக்கு, உருபு அது உடைய என்பவைகளாம்;பொருள் சம்பந்தப் பொருளாம்.

உ-ம். சாத்தனது தலை.
முருகனுடையவேல்.

௧0௬.—ஏழாம்வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

ஏழாம்வேற்றுமைக்கு உருபு இல், கண், உள், இடம் முதலியவைகளாம். பொருள் இடப்பொருளாம்.

உ-ம். ஊரிலிருந்தான்.
மணியின்கணொளி.

௧0௭.—எட்டாம் வேற்றுமைக்கு உருபும் பொருளும் எவை?

எட்டாம் வேற்றுமைக்கு உருபு படர்க்கைப் பெயரீற்றில் ஏ ஓ மிகுதலும், அவ்வீறு திரிதலும், கெடுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத் திரிதலுமாம்; பொருள் விளிப் பொருளாம். விளிப்பொருள் அழைக்கப்படும் பொருள்.

உ-ம். மகனே கேள்........ஏ மிகுந்தது.
அப்பனோ வந்தாய்...ஓ மிகுந்தது.
பிள்ளாய் படி........ஈறு திரிந்தது.
தோழ சொல்லாய்....ஈறு கெட்டது.
தம்பி வா.............ஈறியல்பாயிற்று.
மக்காள் படியுங்கள்..ஈற்றய லெழுத்துத் [திரிந்தது.

௧௰௮.—ஐ முதலிய உருபேற்குமிடத்துத் தன்மைப்பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?

யான், நான் என்பவை என் எனவும், யாம் நாம், யாங்கள், நாங்கள் என்பவை எம், நம் எங்கள், நங்கள் எனவும், விகாரப்பட்டு வரும்,

உ-ம். என்னை, எம்மை, நம்மை, எங்களை, நங்களை,
மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

௧௰௯.—ஐ முதலிய உருபேற்கு மிடத்து முன்னிலைப்பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?

நீ என்பது நின், உன் எனவும், நீர், நீங்கள் என்பவை நும், உம், நுங்கள், உங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.

உ-ம். நின்னை, உன்னை, நும்மை, உம்மை, நுங்களை, உங்களை.
மற்றை யுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

௨௰.—ஐ முதலிய உருபேற்குமிடத்துத் தான், தாம், தாங்கள் எனனும் படர்க்கைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்?

தான் என்பது தன் எனவும், தாம், தாங்கள் என்பவை தம், தங்கள், எனவும் விகாரப்பட்டு வரும்.

உ-ம். தன்னை, தம்மை, தங்களை. மற்றையுருபுக ளோடும் இப்படியே ஒட்டுக.

## வேற்றுமை முடிபு.

௧௧௩.—எட்டு வேற்றுமைகளுள்ளும் எவ்வெவ்வேற்றுமை எவ்வெச்சொல்லைக்கொண்டு முடியும்?

(௧.) எழுவாய்வேற்றுமை வினையையும் பெயரையும் வினாவையுங் கொண்டு முடியும்.

உ-ம். சாத்தன் வந்தான்.
சாத்தனவன்.
சாத்தன் யாவன்.

(௨.) நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையையும் பெயரையுங் கொண்டு முடியும்.

உ-ம். சாத்தானுக்குக் கொடுத்தான்.
பிணிக்கு மருந்து.
அவையின்கணிருந்தான்.
மணியின்கணொளி.

(௩.) ஆறாம்வேற்றுமையும் எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும்.

உ-ம். சாத்தனது கை.
சீர்காழியின் வடக்கு.

(௪.) ஒழிந்த வேற்றுமைகள் வினையைக்கொண்டு முடியும்.

உ-ம். குடத்தை வனைந்தான்.
வாளால் வெட்டினான்.
நோயினீங்கினான்.
கொற்றவா.

பெயரியல் முற்றிற்று.

## ௨. வினையியல்.

௧௧௨.—வினைச்சொல்லாவது யாது?

ஒருபொருளினது தொழினிகழ்ச்சியை அறிவிக்குஞ் சொல்லாம். [தொழினிகழ்ச்சி தொழிலினது நடத்தல்.]

---

### வினைச்சொல் வகை.

௧௧௩.—வினைச்சொல் எத்தனைவகைப்படும்?

தெரிநிலைவினை, குறிப்புவினை என இரண்டுவகைப்படும்.

௧௧௪.—தெரிநிலைவினையாவது யாது?

காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை தெரிநிலைவினையாம்.

உ-ம். சாத்தன் நடந்தான்.
சாத்தன் நடக்கிறான்.
சாத்தன் நடப்பான்.

௧௧௫.—குறிப்புவினையாவது யாது?

காலத்தைக் குறிப்பாகக்காட்டும் வினை குறிப்புவினையாம்.

உ-ம். சாத்தன் முன்பு நல்லவன்.
சாத்தன் இப்பொழுது நல்லவன்.
சாத்தன் இனி நல்லன்.

௧௧௬.—தெரிநிலைவினை குறிப்புவினை என்னும் இரண்டுந் தனித்தனி எத்தனைவகைப்படும்?

முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், என மும் மூன்றுவகைப்படும். இவையெல்லாம் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

## முற்றுவினை.

கசஎ.—முற்றுவினையாவது யாது?

பால் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக் கொண்டு முடியும் பெயராம்.

உ-ம்.
செய்தான் சாத்தன்......தெரிநிலைவினைமுற்று.
நல்லன் சாத்தன்......குறிப்புவினைமுற்று.

## படர்க்கைவினை முற்று.

கசஅ.—உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

அன், ஆன், என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தனன், நடந்தான்; தெரி.
சிறியன் சிறியான். குறி.

கசகூ.—உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

அள், ஆள் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தனள், நடந்தாள். தெரி.
சிறியள். சிறியாள். குறி.

கஉ0.—உயர்திணைப்பலர்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

அர், ஆர் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தனர், நடந்தார், தெரி.
சிறியர் சிறியார். குறி.

கஉக.—அஃறிணையொன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

து, று என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தது, போயிற்று. தெரி.
சிறியது, அற்று. குறி.

௧௨௨.—அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் யாவை?

அ, ஆ என்னும் விகுதிகளையுடைய வினைகளாம். இவற்றுள், ஆ எதிர்மறையிடத்து வரும்.

உ-ம். நடந்தன, நடவா. தெரி.
சிறியன, — குறி.

தன்மைவினைமுற்று.

௧௨௩.—தன்மையொருமை வினைமுற்றுக்கள் யாவை?

ஏன் என்னும் விகுதியையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தேன். தெரி.
சிறியேன். குறி.

௧௨௪.—தன்மைப்பன்மை வினைமுற்றுக்கள் யாவை?

அம், எம், ஓம், என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தனம், நடந்தேம், நடந்தோம். தெரி
சிறியம், சிறியேம், சிறியோம் குறி.

முன்னிலைமுற்று.

௧௨௫.—முன்னிலை யொருமை வினைமுற்றுக்கள் யாவை?

ஆய், ஐ என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தாய், நடந்தனை. தெரி.
சிறியாய், சிறியை. குறி.

௧௭௬.—முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்கள் யாவை?

ஈர் என்னும் விகுதியையுடைய வினைகளாம்.

உ-ம். நடந்தீர். தெரி.
சிறியீர். குறி.

## எதிர்மறை வினைமுற்று.

௧௭௭.—எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுக்கள் யாவை?

இல், அல், ஆ என்னும் எதிர்மறையிடைநிலைகளைப் பெற்று வரும் வினைமுற்றுக்களாம்.

உ-ம். நடந்திலன், நடக்கலன், நடவான்.

௧௭௮.—எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுக்கள் யாவை?

அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி வரும் வினைமுற்றுக்களாம்.

உ-ம். அல்லன், இலன்.

## முன்னிலை யேவல் வினைமுற்று.

௧௭௯ முன்னிலையேவலொருமைவினைமுற்றுக்கள்யாவை?

ஆய், இ, ஏல் என்னும் விகுதிகளையுடைய வினைமுற்றுக்களாம்.

உ-ம். உண்ணாய், உண்ணுதி, உண்ணேல், உண், தின், பார் என ஆய் விகுதி குன்றியும் வரும். எதிர்மறையேவலொருமை வழக்கத்தில் உண்ணாதே, உண்ணாதிரு எனவும் வரும்.

௧௮௦.—முன்னிலையேவற்பன்மைவினைமுற்றுக்கள்யாவை?

ஈர், உம், மின் என்னும் விகுதிகளையுடைய வினைகளாம்.

உ-ம். உண்ணீர், உண்ணும், உண்மின்.

எதிர்மறையேவற் பன்மை செய்யுளிலே உண்ணன்மின் எனவும், வழக்கத்திலே உண்ணாதேயுங்கள், உண்ணாதிருங்கள் எனவும் வரும்.

## வியங்கோள்வினைமுற்று.

சகூக.—வியங்கோள் வினைமுற்றுக்கள் யாவை?

க, அ என்னும் விகுதிகளைப் பெற்று இருதிணையைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் எதிர்காலங் காட்டி வரும் ஏவல்வினை முற்றுக்களாம்.

உ-ம். யான் வாழ்க, யாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, ஐயாவர.

## செய்யுமென்முற்று.

சகூஉ.—செய்யுமென் வாய்பாட்டுப் படர்க்கை வினைமுற்று எப்பால்களுக்குப் பொதுவாய் வரும்?

உயர்திணை யொருமைக்கும் அஃறிணையொருமை பன்மைக்கும் பொதுவாய் வரும்.

உ-ம். அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்.

## பொதுவினைக்குறிப்பு.

சகூங.—தெரிநிலை வினைமுற்றேயன்றிக் குறிப்புவினைமுற்றும் பலவிடங்கட்குப் பொதுவாய் வருதலுண்டோ?

(க.) வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் நான்கு வினைக்குறிப்புமுற்றும் இருதிணையைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

உ-ம். அவன் அவள் அவர்
அது அவை யான்
யாம் நீ நீர் } வேறு, இல்லை, உண்டு, யார்.

(உ.) என், என்ன, என்னை என்னும் வினாவினைக் குறிப்பு முற்று அஃறிணையொருமை பன்மைகளுக்குப் பொதுவாய் வரும்.

உ-ம். அஃது
அவை } என், என்ன, என்னை.

## பெயரெச்சம்.

௧௩௪.—பெயரெச்சமாவது யாது?

பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச்சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினையாம். உ-ம்.

உண்ட சாத்தன்... ...செய்த என்னும் வாய்பாட்டிறந்தகாலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

உண்கின்ற சாத்தன் ... செய்கின்ற என்னும் வாய்பாட்டு நிகழ்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

உண்ணுஞ் சாத்தன் ... செய்யும் என்னும் வாய்பாட்டெதிர்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

கரிய சாத்தன் ... ... குறிப்புவினைப் பெயரெச்சம்.

உண்ணாத சாத்தன்... ... எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

இல்லாதபொருள் ... ... எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சம்.

## வினையெச்சம்.

௧௩௫.—வினையெச்சமாவது யாது?

பால் காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச்சொல்லாய் வினைச்சொல்லைக் கொண்டு முடியும் வினையாம்.

௧௩௬.—தெரிநிலை வினையெச்சமெத்தனை வகைப்படும்?

செய்தென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம், செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினையெச்சம், செயினென்னும் வாய்பாட்டெதிர்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

௧௩௭.—செய்தென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்கள் யாவை?

உ, இ, ய் என்னும் விகுதிகளைப் பெற்றுத் தன் கருத்தாவின் வினையைக்கொண்டு முடியும் வினையெச்சங்களாம்.

உ-ம். சாத்தனுண்டு வந்தான்.
சாத்தனோடி வந்தான்.
சாத்தன் போய்த்திரும்பினான்.

௧௩௮.—செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கு முரிய வினையெச்சங்கள் யாவை?

அகரவிகுதியைப் பெற்றுத் தன்கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையுங் கொண்டு முடியும் வினையெச்சங்களாம்.

உ-ம். மழை பெய்ய நெல் விளைந்தது. பிற. இற.
சாத்த னுண்ண வந்தான். தன்க. எதி.
சூரிய னுதிக்க வந்தான். பிறக. நிக.

எதிர்காலச் செயவென் வினையெச்சம் உண்ணற்கு வந்தான், உண்ணும்படி வந்தான், உண்ணும் பொருட்டு வந்தான், எனவும் வரும்.

கஅக.—செயினென்னும் வாய்பாட்டெதிர்கால வினையெச்சங்கள் யாவை?

இன், ஆல், கால் முதலிய விகுதிகளைப் பெற்றுத் தன்கருத்தாவின் வினையையும் பிற கருத்தாவின் வினையையுங் கொண்டு முடியும் வினையெச்சங்களாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | அவனுண்ணின் வருவான். | தன். |
| | அவனுண்ணிற் போவேன். | பிற. |
| | அவனுண்டால் வருவான். | தன். |
| | அவனுண்டாற் போவேன். | பிற. |
| | அவனுண்டக்கால் வருவான். | தன். |
| | அவனுண்டக்காற் போவேன். | பிற. |

கஅ௨.—எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் யாவை?

எதிர்மறை ஆகாரவிடைநிலையோடு உ, மல், மே என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினையெச்சங்களாம்.

உ-ம். அவனுண்ணாது வந்தான்.
நான் விழாமற் காத்தான்.
நான்போகாமே தடுத்தான்.

கஅங.—குறிப்பு வினையெச்சங்கள் யாவை?

பண்படியாகத் தோன்றி அ, றி, து, மல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும வினையெச்சங்களாம்.

உ-ம். மெல்லப் பேசினான்.
அருளின்றிச் சொன்னான்.
அறமல்ல தில்லை.
அறமல்லாம லில்லை.

## தெரிநிலைவினைப்பகுப்பு.

௧௪உ.—தெரிநிலைவினைச்சொற்கள் இன்னும் எவ்வெவ்வகையிற்பிரிவுபட்டு வழங்கும்?

செயப்படுபொருள் குன்றிய வினை செயப்படுபொருள் குன்றாதவினை எனவும், தன்வினை பிறவினை எனவும், செய்வினை செயப்பாட்டுவினை எனவும் வெவ்வேறு வகையிற் பிரிவுபட்டு வழங்கும்.

உ-ம்.

நடந்தான் ... செயப்படுபொருள் குன்றியவினை.
உண்டான் ... செயப்படுபொருள் குன்றாதவினை.
நடந்தான் } ...தன்வினை.
உண்டான் }
நடப்பித்தான் } ...பிறவினை
உண்பித்தான் }
அடித்தான்............செய்வினை.
அடிக்கப்பட்டான் ...செயப்பாட்டுவினை.

---

## வினையாலணையும் பெயர்.

௧௪௩.—பெயர்ச்சொல்லேயன்றி வினைச்சொல்லும் வேற்றுமையேற்று வருமா?

பொருளினது தொழினிகழ்ச்சியை அறிவிக்கும் முற்றுவினை, அப்பொருளுக்குப் பெயராய் வழங்கப்படும்போது, வேற்றுமையுருபேற்று வரும்.

உ-ம். வந்தானை, வந்தானால் தெரிநிலை வினையாலணையும்பெயர்.

மூன்பு பெரியனை, மூன்பு பெரியனால் குறிப்புவினையாலணையும் பெயர்.

வினையியன் முற்றிற்று.

---

## ௬. இடையியல்.

௧௪௪.—இடைச்சொல்லாவது யாது?

தனித்து வழங்குதலின்றிப் பெயரையும் வினையையும் அடுத்துவருஞ் சொல்லாம்.

௧௪௫.—இடைச்சொற்கள் எவை?

வேற்றுமை யுருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், போல் நேர் நிகர் முதலிய உவமவுருபுகளும் சுட்டும் வினாவும் பிறவழியினாலே தத்தமக்குரிய பொருளை யறிவித்து வருவனவுமாம்.

௧௪௬.—தத்தம் பொருளை அறிவித்து வரும் இடைச்சொற்கள் எவை?

ஏ, ஓ, உம், மற்று, என, என்று, இனி, முன், பின், கீழ், மேல், தோறும், ஐயோ முதலியவைகளாம்.

௧௪௭.—ஏகாரவிடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?

ஏகாரம் இரண்டுபொருளைத் தரும். அவை யாவன:

(௧.) தேற்றம். உ-ம். உண்டே கடவுள்.
(௨.) பிரிநிலை. உ-ம். அவனேயெடுத்தான்.

௧௪௮.—ஓகாரவிடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?

ஓகாரம் மூன்று பொருளைத் தரும். அவை யாவன:

(க.) ஐயம். உ-ம். குற்றியோ மகனோ.
(உ.) எதிர்மறை. உ-ம். அவனோ கொண்டான்.
(ங.) வினா. உ-ம். மாடோ வந்தது.

கசக.—உம்மென்னு மிடைச்சொல் எத்தனை பொருளைத் தரும்?

உம் என்பது ஐந்துபொருளைத் தரும். அவையாவன:

(க.) எண். உ-ம். பொன்னும் வெள்ளியும்.
(உ.) எச்சம். உ-ம். சாத்தனும் வந்தான்.
(ங.) முற்று. உ-ம். எல்லாரும் வந்தார்.
(ச.) சிறப்பு. உ-ம். வேடரும் மயங்கும் மலை.
(ரு.) எதிர்மறை. உ-ம். விளையாடினும் பொய் பேசாதே.

இடையியன் முற்றிற்று.

## ச. உரியியல்.

கருo—உரிச்சொல்லாவது யாது?

பண்பையுணர்த்திப் பெயர்வினைகளுக்கு உரிமைபூண்டு நிற்குஞ் சொல்லாம்,

உ-ம். நனிபேதை, நனி தின்றாள்.

உரியியன் முற்றிற்று.

சொல்லதிகார முற்றுப்பெற்றது.

மூன்றாவது

# தொடர்மொழியதிகாரம்.

## ௧. தொகைநிலைத் தொடரியல்.

---

௧௫௰.—தொடர்மொழியாவது யாது?

ஒன்றோடொன்று பொருள்படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களினது கூட்டமாம்.

௧௫௨.—சொல்லோடு சொற்றொடருந் தொடர்ச்சி எத்தனை வகைப்படும்?

தொகைநிலைத் தொடர் தொகாநிலைத்தொடர் என இரண்டு வகைப்படும்.

௧௫௩.—தொகைநிலைத் தொடராவது யாது?

வேற்றுமையுருபு முதலியன நடுவே தொக்கு நிற்கத் தொடர்வதாம்.

௧௫௪.—தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறுவகைப்படும்.

### வேற்றுமைத்தொகை.

௧௫௫.—வேற்றுமைத் தொகையாவது யாது?

ஐ முதலிய ஆறுவேற்றுமை யுருபும் நடுவே தொக்க தொடர்மொழியாம். உ-ம்.

நிலங் கடந்தான் — இரண்டாம் வேற்றுமைத்தொகை.
கல்லெறிந்தான் — மூன்றாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்மகன் — நான்காம் வேற்றுமைத்தொகை.
ஊர்நீங்கினான் — ஐந்தாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை — ஆறாம் வேற்றுமைத்தொகை.
காட்டுப்புலி — ஏழாம் வேற்றுமைத்தொகை.

## வினைத்தொகை.

௧௫௬.—வினைத்தொகையாவது யாது?

காலங்காட்டும் இடைநிலையும் விகுதியுந்தொக்க பெயரெச்சத் தொடராம்.

நேற்றுக் கொல் யானை — இறந்தகால வினைத்தொகை.
இன்று கொல் யானை — நிகழ்கால வினைத்தொகை.
நாளைக் கொல் யானை — எதிர்கால வினைத்தொகை.

இவை கொன்ற, கொல்கின்ற, கொல்லும் என விரியும்.

## பண்புத்தொகை.

௧௫௭.—பண்புத்தொகையாவது யாது?

பண்புப்பெயருக்கும் பண்பிப்பெயருக்கும் நடுவே ஆகிய என்னும் பண்புருபு தொக்கதொடராம்.

உ-ம். செந்தாமரை. இது செம்மையாகிய தாமரை என விரியும்.

ஒரு பொருளுக்குரிய பொதுப்பெயருக்குஞ் சிறப்புப் பெயருக்கும் நடுவே ஆகிய என்னும் பண்புருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

உ-ம். சாரைப் பாம்பு. இது சாரையாகிய பாம்பு என விரியும்.

## உவமைத்தொகை.

௧௫௮.—உவமைத்தொகையாவது யாது?

போல முதலிய உவமையுருபு தொக்க தொடராம்.

உ-ம். பவளவாய். இது பவளம்போலும் வாயென விரியும்.

## உம்மைத்தொகை.

௧௫௯.—உம்மைத்தொகையாவது யாது?

இடையிலுங் கடையிலும் உம்மை தொக்க தொடராம்.

உ-ம். இராப்பகல். இது இராவும் பகலும் என விரியும்.

## அன்மொழித்தொகை.

௧௬௦.—அன்மொழித் தொகையாவது யாது?

வேற்றுமைத்தொகை முதலாகிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்க தொடராம். உ-ம்.

(க.) பூங்குழல் ...இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

(உ.) தாழ்குழல்...வினைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(ங.) கருங்குழல்...பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இதுகருமையாகிய குழலினை யுடையாள் என விரியும்.

(ச.) தேன்மொழி...உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலு மொழியினை யுடையாள் என விரியும்.

(ரு.) உயிர்மெய் ... உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிருமெய்யுங் கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

தொகைநிலைத் தொடரியன் முற்றிற்று.

## உ. தொகாநிலைத் தொடரியல்.

---

கசுக.—தொகாநிலைத் தொடராவது யாது?

நடுவே வேற்றுமையுருபு முதலியன தொகாது நிற்கத் தொடர்வது தொகாநிலைத் தொடராம்.

கசுஉ.—தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என ஒன்பது வகைப்படும்.

உ-ம்.

(க.) சாத்தன் வந்தான் ... எழுவாய்த்தொடர்.
(உ) சாத்தா வா ... ... விளித்தொடர்.
(ங.) குடத்தை வனைந்தான் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
(ச.) உண்டான் சாத்தன்... வினைமுற்றுத்தொடர்.
(ரு.) உண்ட சாத்தன்... ... பெயரெச்சத்தொடர்.
(சு.) உண்டு வந்தான்... ... வினையெச்சத்தொடர்.
(எ.) மற்றொன்று ... ... இடைச்சொற்றொடர்.
(அ.) நனி பேதை... .. ... உரிச்சொற்றொடர்.
(கூ.) பாம்பு பாம்பு ... ... அடுக்குத்தொடர்.

தொகாநிலைத் தொடரியல் முற்றிற்று.

## ௩. ஒழிபியல்.

௧௬௩.—தொடர்மொழி எத்தனை வகைப்படும்?

முற்றுத்தொடர்மொழி, எச்சத்தொடர்மொழி என இரண்டுவகைப்படும்.

௧௬௪.—முற்றுத்தொடர்மொழி யாவது யாது?

எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருண் முதலியனவுங்கொண்டு கூடாதாயினுங் கூடியாயினு முடிவுபெற்று நிற்குந் தொடர்மொழியாம். இது வாக்கியமெனப்படும்.

உ-ம். சாத்தன் வந்தான்
சாத்தன் சோற்றை யுண்டான்.

௧௬௫.—எச்சத்தொடர்மொழி யாவது யாது?

முடிவு பெறாத முற்றுத் தொடர்மொழிக்கு உறுப்பாக வருந் தொடர்மொழியாம்.

உ-ம். யானைக்கொம்பு.
உண்ட சாத்தன்.

௧௬௬.—பயனிலை எழுவாயோடு எப்படி இசைந்து நிற்றல் வேண்டும்?

பயனிலை எழுவாயோடு திணை பால் இடம் என்னு மூன்றினும் மாறுபடாது இசைந்து நிற்றல்வேண்டும்.

உ-ம். நம்பிவந்தான்
நங்கை வந்தாள்
அந்தணர் வந்தார் } வழாநிலை.
நான் வந்தேன்
நீ வந்தாய்

நம்பி வந்தது ... திணைவழு
நங்கை வந்தான் ... பால்வழு
அவன் வந்தேன் ... இடவழு.

௧௬௭.—பல எழுவாய் அடுக்கி வந்தால் எப்பயனிலை கொண்டு முடியும்?

உயர்திணைப் படர்க்கையெழுவாய் பல அடுக்கிவந்தால் பலர்பாற்படர்க்கைப் பயனிலை கொண்டுமுடியும். அஃறிணைப்படர்க்கையெழுவாய் பல அடுக்கி வந்தாற் பலவின்பாற்படர்க்கைப் பயனிலைகொண்டு முடியும்.

உ-ம். நம்பியு நங்கையும் வந்தார்.
யானையுங் குதிரையும் வந்தன.

௧௬௮.—வெவ்வேறிடத்தெழுவாய் அடுக்கி வந்தால் எப்பயனிலை கொண்டு முடியும்?

(௧.) முன்னிலை யெழுவாயோடு படர்க்கையெழுவாய் அடுக்கி வரின், முன்னிலைப்பன்மைப்பயனிலை கொண்டு முடியும்.

உ-ம். நீயுமவனும் போயினீர்.

(௨.) தன்மையெழுவாயோடு முன்னிலையெழுவாயேனும் படர்க்கையெழுவாயேனும் இவ்விரண்டெழுவாயுமேனும், அடுக்கி வரின், ப் பன்மைப்பயனிலைகொண்டு முடியும்.

உ-ம். யானு நீயும் போயினோம்.
யானு மவனும் போயினோம்.
யானு நீயு மவனும் போயினோம்.

கசுகூ.—ஒருமைப்பால் பன்மைப்பாலாகவுஞ் சொல்லப்படுமோ?

ஒருவரை உயர்த்திச் சொல்லுமிடத்து, ஒருமைப்பால்பன்மைப்பாலாகவுஞ்சொல்லப்படும்.

உ-ம். புலவனார் வந்தார்.

கஎ0.—முக்காலத்திலும் இடையறாது நடக்கும் பொருளின் வினை எக்காலத்தினாலே சொல்லப்படும்?

நிகழ்காலத்தினாலே சொல்லப்படும்.

உ-ம். மலை நிற்கின்றது.
கடவுளொருவரிருக்கிறார்.

கஎக.—ஒருகாலவினை மற்றொருகால வினையாகவுஞ் சொல்லப்படுமோ?

(க.) எதிர்காலவினை விரைவுபற்றி நிகழ்கால வினையாகவேனும் இறந்தகாலவினையாக வேனுஞ் சொல்லப்படும்.

உ-ம். வருகிறேன் வருகிறேன். இது சீக்கிரம் வருவேன் எனப் பொருள்படும்.
உண்டேன் உண்டேன். இது சீக்கிரம் உண்பேன் எனப் பொருள்படும்.

(உ.) எதிர்காலவினை மிகுதிபற்றியுந் தெளிவுபற்றியும் இறந்தகால வினையாகவுஞ் சொல்லப்படும்.

உ-ம். (க.) களவுசெய்யிற் கையறுக்கப்பட்டாய்.
(உ.) அரசனோடெதிர்த்தாற் கெட்டாய்.

௪௭௨.—இத்தனையென்று தொகைப்பட்டு நிற்கும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும் முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து எப்படிவரும்?

முற்றும்மை பெற்று வரும். உ-ம்

(க.) தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்.
(உ.) ஒளிமுன்னிருள் எங்குமில்லை.

ஒழிபியன் முற்றிற்று.

---

தொடர்மொழியதிகார முற்றுப்பெற்றது.

## இலக்கணச் சுருக்க வினாவிடை

முற்றுப்பெற்றது.

---